# <u>பெற்றோர் ஆசிரியர் சந்திப்புக் கூட்டங்கள் (2019)</u>

நம் நிலையத்தில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள், தம் பிள்ளைகளின் கல்வித் தரத்தை அறிந்துகொள்வதற்கும் அவர்களின் பண்பு நலன்களைப் பற்றி அறிந்துகொள்வதற்கும் பெற்றோர் ஆசிரியர் சந்திப்புக் கூட்டங்கள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. இவ்வாண்டும் இக்கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் வகுப்பாசிரியர்களிடம் அவர்களின் செயல்பாடுகள் குறித்துக் கேட்டறிந்தனர். மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்த பெற்றோர்களும் ஆசிரியர்களும் எவ்வகையில் உதவலாம் என்பது குறித்துக் கலந்துரையாடினர். இக்கூட்டங்கள் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு மிகுந்த பயனளித்தன எனலாம். மேலும், 'மாணவர் – ஆசிரியர் – பெற்றோர்' என்ற முத்தரப்பினருக்கிடையேயும் ஓர் அணுக்கமான உறவு மலர்வதற்கும் வழிகோலின.





